

# நெய்தல்

கவிதை இதழ் - 5

தை - 2021

# நெய்தல்

**கவிதை இதழ் 5**

*தை 2021*

*ஆசிரியர் : முல்லைஅமுதன்*

*வடிவமைப்பு : நெகிழன்*

*படைப்புக்கள் அனுப்ப*

*R.Mahendran,*
*34.Redriffe Road, Plaistow,*
*London E13 0JX. UK*
*neythal34@gmail.com*

*படைப்புக்களின் கருத்துக்களுக்கு*
*படைப்பாளர்களே பொறுப்பு*

வணக்கம்,


நெய்தல் இதழ் 5 உங்கள் பார்வைக்குத் தந்திருக்கிறோம்.சிற்றிதழ்களின் தாமதம் தாங்கள் அறியாததல்ல.புதிய ஆண்டில் புதிய கனவுகளுடன் ஆரம்பித்திருக்கிறோம். நீண்டகாலக் கனவுகளில் ஒன்றாக கவிதைக்காக நெய்தல் இதழைக் கொண்டுவந்தமையும், புதியவர்களுடன், கவிதை உலகில் தங்களின் ஆழமான படைப்புக்களைத் தந்தவர்களையும் இணைத்தே நமது பயணம் தொடர்கிறது. படைப்புக்களை இந்த இதழில் பிரசுரம் செய்யாதவைகள் தொடர்ச்சியான இதழ்களில் பிரசுரமாகும். பரஸ்பரம் கவிஞர்களை அறிந்துகொள்ளுமளவிற்கு முன்னைபோலல்லாது இணையம் போன்ற நவீன வசதிகள் கைகளுக்குள் வந்துவிட்ட சூழல்.. கவிஞர்களைப் பற்றிய தேடல் அதிகமாவே உள்ளது.அவர்களின் கவிதைகளைப் பற்றிப்பேசவும் ஆங்காங்களே நிறுவனங்களும், கவிதைக் குழுமங்களும், வாசகசாலைகளும் அதிகமாகவே நம் முன் இருக்கின்றன. கவிதைகான இதழ்களையும் படைப்பாளர்களும், வாசகர்களும் அக்கறை செலுத்துகிறார்கள் கண்கூடு.

நெய்தல் வெளிவந்த இதழ்களை ஒரே தொகுப்பாகவும் வெளிவரும்.

நம்பிகையுடன்,

முல்லை அமுதன்

"ரிஷி" (லதா ராமகிருஷ்ணன்)



# நினைவு நாள்


*எதிர்பாராமல் தோளில் எங்கிருந்தோ வந்திறங்கும்*
*மலரிதழ்போல*
*அண்ணாந்த கண்நிறைக்கும் வானவில்போல*
*அரைக்கணமே உணரமுடிந்த உள்ளொளிபோல*
*என்றோ கண்ட குழந்தைக்கண்ணின் நிர்மலம்போல*
*எங்கோயிருக்கும் அருவியின் குளிர்நீர்த்திவலைகள்போல*
*எல்லாமாகியிருக்கும் காற்றுபோல*
*பொல்லாப்பாலையின் பேய்த்தகிப்புபோல*
*அசந்த நேரம் சுருக்கென்று தைத்துவிடும் ஊவாமுள்போல*
*செருப்புக்கும் பாதத்திற்கும் இடையே சிக்கிக்கொண்டிருக்கும்*
*மணற்துகள்கள்போல*
*வாயிலிட்ட சோறில் இடறும் கற்கள்போல்*
*முகக்கவசத்திற்குள் கசகசக்கும் வியர்வைத்துளிகள்போல*
*இடுப்புக்குடச் சுமையின் அழுத்தத்தில் மளுக்கென்று எங்கோ*
*மிகுவலி திரளச் சுளுக்கிக்கொள்வதுபோல*
*மனதைக் குடைந்தும் கடைந்தும் உடைத்தும் கடைத்தேற்றியும்*
*தினந்தினம் உடன்வந்துகொண்டிருக்கும்*
*நினைவுக்கென்று தனியாக நாள் உண்டா என்ன?*

**கலா புவன்**

# கடந்து போகிறவர்களின் திசைகள்

*நான் நடந்து கொண்டிருக்கிறேன்*
*என்னை பின் துரத்தி கடந்து போகும் வாகனங்கள் மனிதர்கள்*
*ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம்*
*பாதைகள் வெவ்வேறானவை*
*நோக்கங்கள் வேறு வேறானவை*
*மிதிவண்டிக்காரனின் இலக்கு வேறு*
*காரில் கடந்து போகும் யுவதியின் முடிவிடம் வேறு*
*பாதை ஒன்று தான்*
*பயணங்கள் பல*
*கடந்து போகும் மனிதர்களின் முகத்தில்*
*கப்பிக் கிடக்கும் சோகம், சந்தோஷம்*
*துயரம்,மலர்ச்சி, நிறைவு,கோபம்,*
*ஆத்திரம்,மோகம் வெவ்வேறானதே*
*அவர்கள் எதிர் கொள்ளப் போகும்*
*முன் உள்ள இடங்கள்*
*முற்றிலும் வெவ்வேறானவை*
*சந்தர்ப்பங்களும்,நோக்கங்களும் வேறாகயிருக்கையில் கடந்து போவது*
*தனித்தொரு இயல்பாகிறது*
*சக மனிதர்களின்,மனிஷகளின்*
*நோக்கங்களை அறியாமலேயே*
*நான் நடந்து போகிறேன்*
*பாதை நீளமாகக் கிடக்கிறது*
*முடிவற்ற பயணங்களும்*
*கடந்து செல்லுதலும்*
*வாழ்க்கையில் வினோதமானவையே*

க.மு.மு.கியாஸ், காத்தான்குடி



# “இமை விடும் தூது”

இன்பத்தைத் தேடியே நானும்
இளமையை இழந்தது இனி போதும்
இரவும் இருண்டது நிலவும் பிறந்தது
இன்னிசை கேட்க மனமும் ஏங்குது

இமைகளில் நானும் தூது விட
இமைக்காமல் நீயும் உறைந்து விட
இனிதாய் கனவுகளில் உதித்து விட
இதயமும் வலியை விழியில் இயக்குமோ

இதழ்களில் முத்தச் சண்டை போட
இரவும் பகலும் நம்மைத் தேட
இணைந்து வெல்வோம் எதிரிகள் காண
இயற்கை இல்லமாய் உள்ளமும் மாறுமோ

இமைகள் மௌன மொழி பேச
இசைந்து தென்றல் காற்றும் வீச
இரு கரங்கள் ஒன்றாய் உரச
இமையாக உன்னை நானும் காப்பேனோ

**யாழ் எஸ் ராகவன்**

*ராஜாங்கத்தில் வழங்கப்பட்ட*
*அட்சய பாத்திரம்*
*கவனிப்பாரற்று கிடந்தது*


*எப்பொழுதும் உயிரை*
*உறிஞ்சி குடிக்கும்*
*அப்பாத்திரத்தின்*
*நெளிவு சுளிவுகளை*
*ஒருபோதும் மன்னர்*
*கண்டுகொள்வதே இல்லை*

*பாத்திரத்தில் ததும்பும்*
*குருதி*
*சிம்மாசனம் விழாமல்*
*பாதுகாக்கும்*

*ஆதியில் அதன்*
*நீண்ட நாவுகளில்*
*சொட்டும் திரவம்*
*வர்ணம் அற்றது.*


*இப்போது எல்லாம்*
*அதில் ததும்பும்*
*அழுகிய குறிகள்...*

**ச. இராஜ்குமார்**



*முன்னங்கால்*
*வைத்து*
*பின்னங்கால்*
*எடுத்து வைப்பதற்க்குள்*
*கீழே*
*விழும் சிறு குழந்தையென*
*மாறிபோனேன்...*
*உன்னோடு சேர்ந்தால்*
*பின்னெப்படி*
*இருக்கும்..!!!*

**கா.ந.கல்யாணசுந்தரம்**



எண்ணங்களில் வாழும்
மண்சார்ந்த மரபு
வாழ்வியல் அனுபவம்

❍

எட்டாத கனிக்கு
இலக்கு இல்லை
உதிர்தலின் முகவரி

❍

கடைசியில் வந்தாலும்
குரலெழுப்பி நடக்கிறேன்
மேதின ஊர்வலம்

❍

ஒரு குவளை நீருக்குள்
கையெழுத்திடுகிறது
ஓடும் நதி

❍

மணல் அள்ளிய வண்டிக்குள்
கடத்தப்படுகிறது
மண்ணின் நீராதாரம்

❍

தரையைத் தொடும்வரை
ஊஞ்சலாகி மகிழ்விக்கின்றன
ஆலம் விழுதுகள்

**ராதா மரியரத்தினம்**

# காத்திருப்பு

*காதளவோடு ஓடிய இருகண்கள் தேடிட*
*மாதவள் கூந்தலோ கருமுகில்களாய் அலைபாய்ந்திட*
*மாதுளையை ஒத்த அவள் இளமேனி துவண்டிட*
*சீதள மேனியோ கொழுகொம்புன்றித் தவித்திட*

*மன்னவன் வில்லைப் பழிக்கும் புருவங்கள் வியந்திட*
*அன்னத்தின் தூவியும் அனிச்ச மலரையும் விட*
*சொர்ணத்தின் மேனியோ பூப்போல வாடிட*
*மன்னவனை எண்ணிக் கனவினில் மிதக்கிறாள்*

*சிங்கத்தை ஒத்த வீரமுள்ள தீரனாம்*
*அங்கமெல்லாம் போரின் வடுக்கள் அழகூட்ட*
*அங்கதனைப்போல் அவள் தோள்கள் தினவெடுக்க*
*இங்கிவன் எண்ணமெல்லாமவன் காதலி நிறைந்திருக்க*

*மாமரத்தோப்பிலே மாங்குயில்கள் கூடவே*
*சாமரம் வீசுகின்ற இளந்தென்னையிலை தாலாட்ட*
*பூமரங்கள் சொரிகின்ற பூக்களே சாட்சியாய்*
*தாமரை மலரெனச் சிவந்தாள் கன்னிகை*

*மன்னவன் மடிகிடந்து விண்ணிலவைத் துணைக்கழைத்து*
*கன்னமது சிவந்த கதை எண்ணி அவள் நாண*
*வன்னமிகு அழகான இளமாலைப் பொழுதொன்றில்*
*சின்னமொன்று தந்ததனால் தடுமாறியே போனாள்*

*அன்றிலென இணைந்தன இரு உள்ளங்கள்*
*ஒன்றியே ஈருடல் ஒருயிர் ஆகியே*
*என்றுமுனை கைவிடேன் என்றுரைத்தைச் சென்றவன்*
*இன்றளவும் வாராத நிலையெண்ணித் துவண்டழுதாள்*

ஜிவிதன்



# கன்னியின் கலக்கம்

*வயசுக்கு வந்திங்கே
வருசமிரண்டு ஆக முன்னே
வஞ்சி நான் பட்ட துயர்
வார்த்தைக்குள் அடங்கிடுமா???*

*கண்ணாடி முன் நின்று - என்
கண்ணை நான்நோக்கின்
கல்யான ஆசை என
கதைகட்டி விட்டாங்க*

*மலர்ச்சோலை நான்சென்று
மலரழகில் சொக்கி நின்றால்
மன்னவனை எண்ணி அவள்
மயக்கம் என சிரிச்சாங்க*

பாதையிலே நான் தனியே
பயமற்று செல்கையிலே
பலபேரும் கூடி நின்று
பகிடி வதை செய்தாங்க

முக்காடு போட்டுக்கிட்டு
முத்தாய்ப்பா நான்செல்ல
முக்காட்டை விலக்கியெந்தன்
முகம்பார்க்க துடிச்சாங்க

இயற்கை மழை பெய்கையிலே
இன்புற்று நான் நனைய
இரவுநேர காட்சி போல
இச்சை கொண்டு பாத்தாங்க

பட்டாடை நானுடுத்தி
பவ்வியமா போகையிலே
பல்லக்கு தூக்கி போல
பலர் முன்பின்னே வந்தாங்க

நேர்கொண்ட நிமிர்நடையில்
வீதிவழி வந்தபோது
ஆண்போல ஆட்டமென
அவதூறு சொன்னாங்க

இத்தனைக்கும் முகம் கொடுத்து
இரண்டாண்டை போக்கிவிட்டேன்
இனியாச்சும் எந்தன் துயர்
முடிவுறுமோ என்னிறைவா!!!

வேலணையூர் ரஜிந்தன்

# கடிகாரமே கதை கேளு..

*ஓடி ஓடி உழைத்தாலும்
ஓய்வெடுக்க நேரமில்லை
தேடல் மட்டும் ஓயவில்லை
தேய்கிறது நேர காலம்!*


*தேவைகள் உள்ள போது
தீர்த்து வைக்க வசதியில்லை
வசதிகள் அமைந்த போது
தேவைகளோ காலாவதி!*

*காலை முதல் மாலை வரை
கடிகாரத்தை மிஞ்சிய ஓட்டம்
வாழ்க்கைக்குப் பணம் தேடி
வாழ்வைத் தொலைத்து ஓட்டம்!*

*உறவுகள் கூட இருந்தும்
உணர்வு பரிமாற முடியவில்லை
அயலவரையும் அறியாமல்
அவசர யுக வாழ்க்கை இன்று!*

*எங்கே போகிறது மனிதம்
என்று சிந்திக்கவும் நேரமில்லை
இயந்திர யுகத்தில் சிக்கி
வாழ்வின் பொழுதுகளும் கரைகிறது!*


டீன் கபூர்



# யாரும் இப்போது யாருமல்ல

*மழைக்குப் பயந்து ஒரு மரத்திற்குக் கீழே நின்றேன்.*
*எனக்குப் பயந்த மரம்*
*தெருவில் குடையுடன் வந்தவரிடம் சேர்ப்பித்தது.*
*இடைநடுவில்*
*அவர் தன் வீடு வருவதை அறிவிக்கிறார்.*
*மழை*
*நனைக்கத் தொடங்கியது.*
*மின்னலும்*
*முழக்கமும்*
*துரத்திக் கொண்டிருக்கின்றன*
*இன்னும் 300 மீற்றர்*
*எனது வீட்டுக்காக.*
*நானும் பெரும் மழையானேன்.*

**நிலாக்கவி நதீரா**



# கருகிப் போகும் விவசாயம்

*பெருகிப்போன மக்கள் தொகையில்*
*கருகிப்போன விவசாயம்*
*நாகரீக வாழ்வினிலே*
*நாற்று வாசனையும்*
*நாற்றமாய்த் தெரிகிறது*
*பொன்னை விளைவிக்கும்*
*பூமித்தாயின் வயிற்றில்*
*கட்டிடப் புற்றுநோயும்*
*தொற்றிக்கிடக்கு*
*ஆலைப் பூதகிகள்*
*பாலைப் பீச்சுவதால்*
*ஆறுகளில் அழுக்குகளும்*

கொட்டிக்கிடக்கு
முட்டாள் சட்டங்களால்
முடங்கிப்போன விவசாயம்
பூமியின் அங்கங்களைக்
கூறுபோடும் வியாபாரம்
கருக்கலில் கண்முழித்து
வாய்க்காலில் பல்துலக்கி
கேணியில் குளித்து
கோணியில் தலைதுவட்டுபவன் -விவசாயி
ஆண்டவன் கொடுத்த
சுரப்பிகள் பல
இவனுள் வேலை
செய்பவை சில
அவன் வியர்வை நாற்றம்
அது நாட்டை
மணக்கச் செய்யும்
மகரந்தத் துகள்கள்
நாகரீக மனிதனோ
கிராமத்தை வெறுக்கிறான்
நகரம் தேடி பறக்கிறான்
நரகம் நாடி நகர்கிறான்
படைத்தவன் கடவுளென்றால்
பயிர்விப்பவர்களும் கடவுளே
விவசாயத்தைப் போற்றிடுவோம்
வளமுடனே வாழ்ந்திடுவோம்

**ஜமீல்**

# மழையும் பொழுதினில்

*நெடும் கோடைக்குப் பின்னராக*
*கத்திக் கூச்சலிட்டபடி*
*பொடு பொடுக்கிறது பேய் மழை*

*சுறுண்டு கிடந்த வீட்டுப் பீலி*
*நீர் வீழ்ச்சியென தன்னை உரு மாற்றுகிறது*

*சிறுவர்கள் ஆடைகளை கழைந்தெறிந்து விட்டு*
*அதன் கீழ் சுதந்திரமாக குளித்து*
*முற்றமெங்கும் சிறு குளமென தேங்கி நின்றனர்*

*அவர்களின் எல்லையற்ற பரவசமும் அமளியும்*
*உம்மா சிறுமியாக இருந்த போதான ஞாபகங்களை தூவாணமாக*
*மீட்டிக் கொண்டிருந்தன*

*சிறுவர்களை துரத்தும் சாக்கில்*
*உடன் வெளியில் சென்று*
*தனது ஆரண்யப் பராயத்து நினைவுகளை*
*மழையில் மனம் குளிர நலைத்து*
*மழையோடு மழையாகினாள்*

*மழையை யாருக்குத்தான் பிடிக்காது*
*என் உம்மா மட்டும்*
*வசந்த காலத்திற்கெதிராக குடை விரிக்க*


ப.மதியழகன்

# உதிரச் சுவடுகள்

குருதி கலந்த நீரைத்தான்
குடிக்க வேண்டியிருக்கிறது
இரத்தம் தோய்ந்த உடைகளைத்தான்
உடுத்த வேண்டியிருக்கிறது
ஈழத்து தாய்மார்களின் கண்ணீரில்தான்
குளிக்க வேண்டியிருக்கிறது
இரத்த வாடையை முகர்ந்து கொண்டே
உண்ண வேண்டியிருக்கிறது
போரில் இறந்து போனவர்களின்
கல்லறை அருகே
உறங்க வேண்டியிருக்கிறது
யுத்தத்தில் கண்களை இழந்த
தமிழர்களின் முகங்கள்
கண்ணை விட்டு அகல மறுக்கிறது
ஈழத்தமிழர்களின் கனவுகள்
புதைக்கப்பட்டு
முள்வேலிக்குள் முடங்கிக் கிடக்கிறது
தமிழினத்தை வேரறுக்க முயலும்
கூட்டத்தை
ஒன்றும் செய்யாமல்
உலகம் கைகட்டி வேடிக்கைப்
பார்க்கிறது
அடிபட்ட பாம்பு தான்
படமெடுக்கிறது
ஒடுக்கப்பட்ட இனம் தான்
விஸ்வரூபம் எடுக்கிறது
நாளை நமது நாளாகும்
என்ற நம்பிக்கை
இன்னும் எம்மிடையே
இருக்கிறது.

# பாரியன்பன் - கவிதைகள்

*உதிர்ந்த பூக்கள்*
*காம்பில் சேராது*
*சிதறிய சொற்கள்*
*வார்த்தையில் ஒட்டாது*
*கழிந்த காலங்கள்*
*திரும்ப வராது*
*கறந்தபால் மீண்டும்*
*மடி புகாது*
*விலகிய தீபம்*
*திரியில் அமராது*
*சிதைந்த இதயம்*
*பழைமை அடையாது*
*விழுந்த அருவி*
*துள்ளி எழாது*
*வடிந்த குருதி*
*நாளம் சேராது*
*தாயின் கருவறை*
*திரும்ப சேர்க்காது*
*வானத்து நிலா*
*தரை இறங்காது*
*ஆதவன் நாளும்*
*திசைமாறி உதிக்காது*
*பார்வைக்கும் பிடிக்கும்*
*காற்று அகப்படாது*
*ஆழிக்கடல் கரை வரும்*
*அலைகளை நிறுத்தாது*
*சாது மிரண்டால்*
*காடு கொள்ளாது*
*இவை அத்தனையும்*
*சாத்தியப்படும் சத்தியப்படும்*
*அன்பே நீ*
*என்னுடன் இருக்கையில்..!*



❍

இந்தப் பாதையை
நான் கடக்கின்ற தருணம்
ஒரு பேரிரைச்சல்
என் செவிப்பறைக்குள்
சூல் கொள்ளலாம்.
நிச்சயம்
ஒரு மௌனத்தை சுமந்து
என்னை கடக்க விடாது
இப்பிரபஞ்சம்.
எதையும்
தீர்மானிக்கும் பக்குவம்
என் சிற்றறிவுக்கு
எட்டி விட்டால்
என்னை சாட்சியமற்ற
கடவுளென்று பிதற்றுவேனென
நீங்கள் எண்ணிச் சரியாமல்
இருங்கள்
எனக்கது போதுமானது.

**பாரியன்பன்**

**வீரசோழன்.க.சோ.திருமாவளவன்**

# புத்தம் போதனைக்கு மட்டும்தான்!

*மரத்தின் கீழமர்ந்த முகமே வெளிச்சம்*
*நிழல்களும் பூக்களும் பூத்துக்குலுங்கும்*
*நிழல்கள் கறுப்பை பிரதியெடுக்கும்.*

*சிலையுள்ள புத்தர்கள் ஆயிரமாயிரம் முளைப்பார்கள்*
*உயிருள்ள புத்தர் இல்லாமலே போனார்*

*மரக்கூடுகளும் பறவைகளும்*
*புத்தரை பார்த்தே பாதை துவக்கும்*
*எச்சங்களை காற்றில் விதைக்கும்*
*விதையும் மரமாகும்*
*வீழ்ச்சியும் உரமாகும்*
*புத்தன் தூங்குவதில்லை.*


*எண்மார்க்கங்களும்*
*எண்ணில் இல்லா பக்கங்களும்*
*வழி செய்தாலும் வாய்ப்பதில்லை*
*ஆசையை துற.*

*சிரிக்கும் புத்தர்கள்*
*வெடிக்கும் புத்தர்கள்*
*வேறுபாடிட்டாலும்*
*ஆசையே துன்பத்திற்கு காரணம்*
*மரிக்கம் வரை மார்தட்டி போதித்தவன்*

*யசோதரையின் மன்னன்*
*கண்ணீரை சுமக்கவில்லை*
*சுமக்க விட்டதில்லை புத்தனின் ராணி*
*நிழல்கள் தொடர்கிறது*

*யுத்தங்களையே விட வைத்தவன்*
*மனம் யுத்தநிலையில் தொடர்கிறது*

திருமலை சுந்தா



# சுயம் இழக்காது..

செடியின் உடம்பெடுத்து
மண்ணில் புதைத்தேன்
துளிராது என்றிருந்தேன்..

வேர் பற்றி
இலையாய் துளிராய்..

யாரோ கூறியது
பின் பற்றுதல்
சுயத்தை அழித்து
ஒழித்து விடுமென்று..

துளிர் துளிர்க்க
இலைகள் கிளைகள்
சுயம் பறிபோகுமென்ற
பயமும் மனதை அரிக்க

மழையும் துளிர்த்தது

சுயம் இழக்காது
பூத்திருந்தது ரோஜா.

# ந க துறைவன் கவிதைகள்

*என் உயிர் என்னிடமே*
*உள்ளுறைந்து வாழ்கிறது*
*அது எங்கு வாழ்கிறதென்று*
*எனக்கு தெரியாது?*
*அதற்கும் தெரியாது?*
*கண்ணுக்கு தெரியாமல்*
*எங்கோ மறைந்துள்ளது*
*இரகசியமாய்*
*என் உயிர் பற்றி*
*எனக்கும் அக்கறை உண்டு*
*மற்றவர்க்கும் அக்கறை உண்டு*
*உயிர் மெய்*
*உயிர் இருந்தால் வாழ்வு*
*உயிர் இழந்தால் மரணம்*
*இதுவே*
*மனித வாழ்வின்*
*இறுதி முடிவு.*

❍

*கூடை நிறைய பூக்கள்*
*அத்தனைப் பெயர் சொல்லி அங்கே விலை கூவி விற்பார்கள்*
*புதிய பூவோடு பழையதும் கலந்து*
*வாங்குவோர் கையள்ளி பார்ப்பார்கள்*
*எது வாங்குவதென்று.*

❍

*மௌனமாய் சில நேரம்*
*மென்மையாய் சில நேரம்*
*வன்மையாய் சில நேரம்*
*அன்பாய் சில நேரம்*
*என்றுமுண்டு எனக்கான*
*சில நேரம்.*

**ப.தனஞ்ஜெயன்**



# உலக கவிஞர்கள் மேல் என் காதலும் கவிதைகளும்

*கவிஞர்களாக இந்த உலகில் பயணிப்பது ஒரு அலாதியான பிரியம்,நம்மைப் போன்ற கவிஞர்கள் அனைவரும் தங்கள் கவிமொழியில் காதல் கொண்டு கவிதையைச் செதுக்கும் சிற்பிகள்,அவர்கள் ஆழம் உலக எல்லைகளை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் உலக கவிஞர்கள் மீது என் பார்வையை உங்களுக்குக் கொடுக்கவே இந்த கட்டுரை, மாபெரும் கவிஞன் எழுதியது மிகவும் என்னைக் கவர்ந்தது,இவன் தொடும் அனைத்தையுமே கவிதையாக மாற்றியவன்,இவனை அறிய "துயர்மிகு வரிகளை இன்றிரவு நான் எழுதுகிறேன்"என்ற வரியில் இன்றளவும் அறியப்படும் மகாக்கவிஞன்.*

*"உலகம் முழுவதும் பூமியின் தோலின் நிறம் ஒன்றே"*

*என்று எழுதிய இலக்கிய நோபல் கலைஞன் பாப்லா நெருடா என்னைக் கவர்ந்தான்.*

*அவன் அரசியல் வாதிகளைக் கண்டு இப்படியும் எழுதுவான்*

*"மலர்களுக்குப் பதிலாக*

*நீங்கள் மூட்டிய தீயால் தகிக்கும் உலோகம்*

*வழியும் வீடுகளைப் பாருங்கள்"*

*என்று நீளும் கவிதையைப் படிக்கும்பொழுது மண்மேல் காதல் மற்றும் மனிதர்களை நேசிக்கும் மாண்பு இதைவிட யாரும் கொள்ள முடியாது என்று தோன்றுகிறது.ஆனால் நெருடா மீது காதல் கொண்டதால் அவன் கவிதைகளை ரசித்துப் படிக்கும் வழக்கம் கொண்டிருக்கிறேன்.*

*அப்படிப்பட்ட கவிஞன் காதலில் மூழ்கும் பொழுது இப்படியும் எழுதுவான்.*

*"உன்னையன்றி வேறெதையும் எனக்குக் காதலிக்க வழி புலப்படவில்லை*

*என் இதயத்தின் மீது நீ வைக்கும் உன் கரமே என் கரம்"*

*காதல் கவிதைகள் மற்றும் பிற கவிதைகளில் சிகரம் தொட்டவன் இந்த மாபெரும் ஸ்பேனிய கவிஞன்.*

*அடுத்து ஜான் மில்டன் லண்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட மாபெரும் ஆங்கில கவிஞன் 1608□1674 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த மகாகவிஞன்,அவரது எழுத்து நடை உலக மக்களால் மிகவும் பிரசித்திபெற்றது.கண் பார்வையற்ற நிலையில் மில்டன் படைத்த காவியமான "இழந்த சொர்க்கம்" என்றென்றும் புகழ்ந்து பேசப்படும்.*

*அவரது சில வரிகள்:*

*அறுபது வருடங்களில் காதலைக்*

*கதைத்துவிட முடியாது எனக் கற்றுக்கொண்டேன்*

*பிரியம் சொல்லும் பெருஞ்சொற்கள் பிரிந்தே ஏமாற்றம் தருகின்றன*

*எது அது எனும் கேள்விகள் தவிர்த்து*

*மலர்வனத்தின் ரோஜா நறுமணம் போலப் பொழிகிறது அது.*
*நீ போய்விட்டாய்*
*பெருங்கடலும், கண்டமும் நடுவில்*
*நின்று நகைக்கின்றன*
*நாம் இணைந்து பார்த்த எல்லாவற்றிலிருந்து*
*எதோ சில ஏனோ திரும்பவருகின்றன*
*வென்ற ஒரு புது படைப்பைப் பின்னுகிறோம் நாம்*
*விசித்திரமான, விரகம் தரும் ஒன்று நடக்கிறது*
*எதிர்த்தும்,வாதிட்டும் வதைந்த*
*வாழ்க்கையின் சிக்கல்கள் உடைத்து விடுதலை வருகிறது*
*பெருவாழ்வின் புதுகீதம் பாடுவோம் நாம்*
*கடவுள் பின்னும் இழைகளில் பிணைந்த*
*புத்துலகு பிறந்தது, அதன் பிரிக்க முடியா அங்கம் நாம்.*

*என்று வாழ்வின் காதலை அழகாகக் கொண்டாடிய கவிஞன் அவன்.*

*இப்படி பயணங்கள் சென்றபோது தென்கொரியா கவிஞன் கோ யுன் என்னை மிகவும் பாதித்தான்.இதுவரை 160க்கும் மேற்பட்ட கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.அதுமட்டும் அல்லாமல் நாவல்,சிறுகதை,கட்டுரை மற்றும் பத்திரிக்கை பணி போன்றவை அவரின் வியக்கத்தகு அம்சங்களில் ஒன்று.இரு முறை நோபல் பரிசுக்கு அவர் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.*

*அவர் இமயமலை பயணத்தின் போது ஒரு கவிதையில்*
*“பெரிய மலைகளுக்குத்தான் பெயர்கள் இருக்கின்றன*
*சிறிய மலைகள் பெயரற்றவை*
*நான் சிறிய மலைகளைப் பாடுகிறவன் “*
*என்றும் அடுத்து*
*ஆந்தை எனும் தலைப்பில்:*
*ஆந்தையே*
*மதிய வேளையில்*
*பளபளக்கும் கண்களுடன்*

*ஒன்றையும் பார்க்க முடியாது.*

*பொறு,*

*உன்னுடைய இரவு நிச்சயமாக வரும்.*

*அருவி போலக் கவிதையை கொட்டும் கவிஞனின் கவிதையில் சற்று நனைந்தேன் புகைப்படத்தில் அவரது பிரமாண்டமான நூலகத்தைப் பார்த்து வியந்திருக்கிறேன்.*

*அடுத்து பெண் கவிஞர்களில் சில்வியா பிளாத் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் கவிதை மரணத்தைக் கொண்டாடும் விதமாக அமைந்தது.1982இல் இவரது தி கலெக்டடு போயம்ஸ் என்கிற*

*கவிதைத் தொகுப்புக்கு புலிட்சர் விருது வழங்கப்பட்டது. இறப்புக்குப் பின்னர் புலிட்சர் பரிசு பெற்ற முதல் கவிஞர் பிளாத். இவர் கவிதை,புதினம்,சிறுகதை என பல்வேறு தளங்களில் இயங்கியவர்.*

***1963** ஆம் ஆண்டு சில்வியா பிளாத் தற்கொலை செய்து கொண்டார்.**31** வயது மட்டும் வாழ்ந்த பெண் கவிஞரின் சாதனை பிரம்பிப்பானது.அவரது டாடி என்கிற கவிதை அவரது குரலில் யூ டியூபில் ரம்மியமான குரலில் கேட்கலாம்.*

*அவரது கவிதை சில:*

*நீ இங்குத் தேநீர் கோப்பையோடு வருகிறாய்*

*நீராவி மாலை சூடி இருக்கிறது*

*அது*

*உதிரத்தின் ஊற்றாகப் பொங்கிப்பாய்கிறது கவிதை*

*எதுவும் அதைத் தடுப்பதற்கில்லை*

*ஆனால் நீ எனக்கு*

*இரண்டு ரோஜா*

*இரண்டு மழலையைத் தருகிறாய்.*

*மற்றொரு கவிதை:*

*மழலையில்லா மங்கை:*

*கருப்பை அதன் கனத்த தோலைக் கலகலக்க வைக்கிறது*

*நிலவு மரத்தோடு பிரிவுகொண்ட எங்கும் போகமுடியாமல்*
*ஏங்கி நிற்கிறது*
*என் நிலமெல்லாம் ரேகையில்லா நிஜக்கரங்கள்*
*சாலைகள் பின்னி முடிச்சாகின்றன*
*நானே முடிச்சாகி நிற்கிறேன்*
*நீ முகரும் ரோஜா நானே*
*இந்த தேகம்*
*இந்த தந்தம்*
*யாவும் நானே*
*மழலையைப்போல உருவியெடுக்கும் உன் குரல் எழும்*
*சிலந்தியைப்போலக் கண்ணாடிகளைப் பின்னுகிறேன் நான்*
*என் உருவத்துக்கு உண்மையாக*
*உதிர்க்கிறேன் உதிரம் மட்டும் வேறெதுவுமில்லை*
*கருஞ்சிவப்பு உதிரம் அது*
*உருகிக்குடி*
*என் காடுகளை கடித்திடுக*
*என் இறுதி ஊர்வலம்*
*இந்த மலை*
*இவை எல்லாம்*
*என் சவங்களின் வாயால் ஒளிர்கின்றன*

இவரது கவிதையின் சில தொகுப்புகள் இணையத்தில் கிடைக்கிறது.இந்த அழகான பெண் பறவை எழுதி வைத்த கவிதைகளில் வாழ்வின் ஏக்கம்,வலி,மீளாத துயரங்களைச் சொல்லி வாழ்ந்து சென்றவர்.இப்படி கவிஞர்களைக் கொண்டாடும் இந்த வாழ்வு எத்தகைய பேரின்பத்தைத் தருகிறது.நம்மைப் போன்ற கவிஞர்களுக்கு தனக்கு முன்பு வாழ்ந்த பறவையின் கீதம் இதமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.இந்த வரிசையில் இன்னும் மகத்தான கவிஞர்களின் வரிசை பட்டியல் நாம் எழுதும் கவிதையைப்போல் வரிகளாக மாறவும் ஒவ்வொரு கவிஞர்களின் மேல் ஒரு தீராத அன்பை எழுதத் தவிக்கிறது.கவிதைப்பசி உள்ளவர்களுக்குச் சிறிது முயற்சிமட்டும் செய்துள்ளேன்.

**பாரதிசந்திரன்**



ஒரு கவிதையும், அதற்கான
சர்ரியலிச வார்த்தைகளும்.

“பார்த்துப் புளித்த பிரபஞ்சம்
யாராரோ மென்று துப்பிய வார்த்தைகள்.
எனதென்று புதிதாய் எழுத எதுவுமில்லை என்பதால்
நான்
வீடற்றவன் ஜன்னல் வழி
கண்ணற்றவன் கவிதைகளைத் திருடி முகமற்றவனிடம தந்தேன்..
அவன் வாசிக்காமலேயே சிலாகிக்கின்றான்
பின் பூ வற்ற
மாலையில்
காற்றைக் கட்டி அணிவிக்கின்றான்
சுமக்க முடியாமல்
தள்ளாடுகையில்
கையற்றவன்
தாங்கிக் கொள்கின்றான்..
உடல் அற்ற ஒருவன்
திடீரென்று நெஞ்சைப் பிளந்து வார்த்தைகளை
திணித்து
மூடுகின்றான்..
தொண்டைக்குழியில்
வார்த்தைகள் உயிரை
அடைத்து கதவின் வழியே போயிருக்கிறார்கள்...
வீடு முழுவதும் தேடியும் மூக்குக்கண்ணாடி
கிடைக்கவில்லை..
பெரும் குடிகாரனின்
அதிகாலை வியாதி போல் என் விரல்கள் நடுங்குகிறது..
நான் எழுதத் தொடங்குகின்றேன்
என் கவிதையை
இதுவரை யாரும் கேட்காத வார்த்தைகளுடன்...”

“கண்ணற்றவன்”-(-கவிஞர்வீரமணி.

*கவிதையும் கவிஞரும் எப்பொழுதும் சும்மா இருப்பதில்லை... வருவதை லபக்கென்று பிடித்தும் அதை லாபகமாய் கடை விரித்தும் விடுகின்றனர் அவர்கள். குழந்தை பிறந்தால் கண் காது மூக்கு நிறம் என ஒரு கூட்டம் விமர்சிக்க வரும் தானே? கவிதை பிறந்தாயிற்று. பொத்தி வைக்க முடியுமா? பூ மலர்ந்தால் தேனீக்களுக்கு சொல்லிவிடவா வேண்டும்? ரசிப்போம் ருசிப்போம் கொண்டாட்டம்தான் தேனீக்களுக்கு கவிதை பிறப்பும் மலர்வும் தனக்கானதா? இல்லை பிறருக்கானதா? என்பதைப் போல் பெரிய தத்துவம் இது..*

*தன் நேரங்களைப் பிய்த்துக் கொண்டு போகும் உயிரிகளிடம் இருந்து நேரத்தைக் காக்கப் போராட வேண்டியிருக்கிறது..கிடைத்த நேரங்களில் அந்தப் போராட்டத்தை நினைத்துப் பாதி நேரம் போய்விடுகிறது. அப்படி இப்படி நெளிந்து கவிதை குழிக்குள் தேடினால்..*

*நெடுந்தொலைவு செல்ல வேண்டுமா? இல்லை கிளைகள் பிரிந்து பிரிந்து ஓரிடத்தில் நின்று விடுமா? இல்லை பாறைகள் திடீரென்று விழுந்து வழி மறைக்குமா? கவிதை படிக்கும் முன் ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறதே அது சொல்ல முடியாது..*

*கவிதை படிக்கும்போது, படிப்பவரை, தலைப்பு எங்கோ ஒரு பாதையை நோக்கி இழுத்துச் செல்லும். முதல்வரி,இரண்டாம் வரி, எனத் தொடர்கையில் உள்வெளி திறக்கிறது. வானம் வந்து கைகட்டிக் கிடக்கிறது. வார்த்தைகளும் வார்த்தைகளுக்கு இடையில் உள்ள சொல்லப்படாத பொருள்களும் முண்டியடித்துக்கொண்டு முன்னிற்கும்...*

*வார்த்தைகள் கவிஞரின் வார்த்தைகள் அல்ல.. படிக்கும் பொழுது வார்த்தைகள் என் பொருள்களாலே நிறைந்து வழிகின்றன... புரிதல் வார்த்தைகளைத் தன்வசம் இழுத்துச் செல்லுகிறது.. எனக்குள் சொல்லித் தரப்பட்ட வார்த்தைகள் அதன் நளினத்தை விட்டுக் கொடுக்காமலேயே தான், தன்னை அடையாளப்படுத்துகின்றன. எங்கோ எதிலோ உணரப்பட்டவை என் உணர்தல்களோடே காட்சிப் படுகின்றன..*

*இப்பொழுது நான், கவிதைக்குள் என் வார்த்தைகள் சொல்லித் தருவதை உணர்வதா? வார்த்தைகளின் கைகோர்ப்பைக்கொண்டு*

*கவிஞன் என்ன கூற நினைத்தான் என கொள்வதா? தடுமாற்றம் தான்..*

*ஒவ்வொரு கவிதை படிக்கும் பொழுதும், இந்தத் தடுமாற்றம் இயல்பாய் ஏற்பட்டு விடுகிறது.. என்னை அறவே தூக்கி எறிந்துவிட்டு எனக்குப் பதில் கவிஞரை உட்காரவைத்து அவர் வாயினால் அவ்வார்த்தைகளின் பொருளைக் கேட்பதனால் ரொம்ப கஷ்டம் தான்..*

*கவிதையைப் படிப்பதற்கு ஏன் ஒவ்வொரு முறையும் கஷ்டப்பட வேண்டும்? நானா? நீயா? எனக் கவிஞனிடம் ஏன் மல்லுக்கு நிற்க வேண்டும் அவன் ஏன் நாம் படிக்கும் பொழுது மூக்கை நுழைக்க வேண்டும். எழுதிய வனுக்கு எழுதியதோடு வேலை முடிந்துவிட்டது. பிறகு ஏன் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவருக்கும் முன்பும் தலை வணங்கி மீண்டும் பொருள் சொல்ல தொடங்குகிறான்.. கவிஞன் தவிர்த்த வார்த்தைகளோடு பயணம் தொடர்ந்தது தொடர்கிறது..*

*கவிதைக்குள் உள்ள வார்த்தைகள் பிரபஞ்சத்தில் சிலருக்குச் சொந்தமானதாகவும் இருக்கின்றன. அவர்கள் அந்த வார்த்தைகளுக்கு உரியவர்கள் தான் என உலகம் இலகுவாய் சொல்லிவிடுகிறது. அம்மாதிரி வார்த்தைகள் வந்தால் நெருடுகிறது. ஒன்று, இதில் எதைப் போய் புகுத்திப் பார்ப்பது...*

*சொல்லாமல் போன வார்த்தைகள் பெரும் அலங்காரங்களுடன் வரவில்லை என்றாலும் நெளிந்து நின்றது கொஞ்சம் பிசுபிசுப்புடன்,..*

*அப்படியும் புரிந்து நகர்ந்தால்... உலக மொழிகளுக்குத் தக வார்த்தைகள் சில இடங்களில் வளர்ந்து நிற்கின்றன. அந்த வார்த்தைகளின் மூலக்கூறுகள் எது என்றே தெரியாமல் அதனை உணர்தல் முடியாது. எப்பப் போறது அந்த இடத்துக்கு? புரியத் தாமதமாகும் வார்த்தைகளோடு வளர கற்றுக்கொண்டே ஆகவேண்டும்..*

*கவிதையைப் படித்து முடிப்பதற்குள் எத்தனை முறை சலிப்பு வீட்டிற்குள் தான்.. சுயம் இருக்கிறதே... அப்பப்பா..*

*கவிதையின் முடிப்பு எப்பொழுதும் இப்படியே தான் முடிய வேண்டுமா எனில், சில பொழுதுகளில் மாறும். அப்பொழுது மட்டுமல்ல கவிதை எப்பொழுதும் இனிமைதான்..*

**விஷ்ணு குமாரபிள்ளை**

*ஊர்க்குள் போகும் பேருந்துகள் ஒரே ஊருக்குள் போகுவதில்லை*
*தடம் மாறியே*
*ஊருக்கு போகுகிறது*

*ஆளில்லாத பேருந்தில்*
*ஏறவில்லை*
*இறஙகவில்லை*
*போகுது பேருந்து*

*ஊர் ஊராய் சுற்றி கொண்டிருந்த*
*பேருந்தில்*
*பயனீகள் ஊர் ஊராய் ஏறுகிறார்கள்*
*இறங்கிறார்கள்*

*ஊரை கூவி ஏற்றும்*
*பேருந்தில்*
*இறங்கவேயில்லை பயனீகள்*

*சம்சா, கடலைமிட்டாய்,*
*வேர்கடலை, தண்ணீர் பாட்டில்*
*ஏறி,இறங்கி விற்பவனுக்கு*
*கிடைக்கவில்லை*
*பேருந்தில் இருக்கைகள்*

*இன்னும்..*
*இன்னும்..*
*ஞபாகங்களாக*
*வெறிச்சோடியில்*
*பேருந்து நிலையம்*

**சந்திரா மனோகரன்**

# தீவிரித்தல்

*ஒற்றைக்காலில்  முனிவரைப்போல்*
*கால்கடுக்க நிற்கும் என் கனவு*
*அதனடியில்*
*கும்மிருளென அப்பிக்கிடக்கிறது வருங்காலம்*
*கரை தழுவி நழுவும் கடலலைகள்*
*விரும்பினாலும்*
*நிச்சயமற்ற வாழ்வுதானே அவைகளுக்கு!*
*இனி...அந்நகரில் வறண்ட ஓடைகள்*
*நிரம்பி வழிவதைப் பார்க்கப் போ வதில்லை*
*வரிசை வரிசையான வீடுகள்*
*காயம்பட்டுப் போவதைக் காணப்போவதில்லை*
*முறுக்கேறிய மலர்ந்த பூக்களை*
*இனி... அவசரப்பட்டுப் பறிப்பானேன்..*
*நடுவீட்டில் சிறுநீர் கழிக்கும் மழலைகளை*
*இனி...அதட்டி அப்புறப்படுத்தவேண்டியதில்லை*
*சாளரம் தொட்டுத் தகதகக்கும் வசந்தம்*
*வேற்றூருக்குப் பின்வாங்குகிறது*
*அகதிகள் கடக்கும் இந்த முகாமில்*
*இனி... கைவளைகள் ஒலியெழுப்பப்போவதுமில்லை*
*வீடிழந்தவர்களின் முணங்கல்கள்*
*யார் யாரையோ நினைத்து நினைத்துத்*
*தகர்ந்து போகின்றன.*
*நானோ ---*
*ஒரு வேசியைப்போல் பதப்படுத்திக்கொண்டு*
*நிலந்தெளியும் முன்*
*ஒரு புது விருந்தாளிகாகக் காத்திருக்கிறேன்.*

வளவ. துரையன்



# உள்ளக்குமிழி

*மகிழ்ச்சியை*
*நிலையென்றெண்ணி*
*திளைத்தாடும்*
*மனத்தினைக்*
*கரைபோட்டுத்தடுத்துவிடு*

*ஓடும்மழைநீரின்*
*ஒழுங்கானகுமிழியாய்*
*உள்ளத்தில்தோன்றினாலும்*
*உள்சென்றுஆழத்தில்*
*உறைபனியாய்ஆனது*

*நட்புகொண்டுவந்து*
*சேர்த்ததோ*
*நாடியஉறவுதான்*
*அள்ளித்தந்ததோ*
*எப்படியோ*
*வந்துவிட்டதுதூறல்*

*பாம்பின்நிழலில்*
*பதுங்குவதுதெரியாமல்*
*மனம்பரவசத்தில்*
*துள்ளிக்கொள்கிறது*

*பூக்கள்மலர்வது*
*பறிப்பதற்குமட்டுமன்று*

## பூனையின்புலம்பல்

*காட்டுராஜாசிங்கம்மீது*
*துர்க்கைவருகிறார்.*

*காலனைவென்றசிவனுக்குக்*
*காளைவாகனமாம்.*

*கழுதைமேலேறித்தான்*
*மூதேவிபவனியாம்.*

*ஆடுகூடசெவ்வாயின்*
*ஊர்தியாம்.*

*பைரவரோவருவதெல்லாம்*
*நாயின்மீதுதான்*

*எமதர்மராஜனுக்கு*
*எருமைதானேவாகனம்.*

*வராகமோபெருமாளின்*
*அவதாரமேஆச்சு*

*நான்மட்டும்என்னா*
*பாவம்செஞ்சேனோ?*
*எந்தக்கடவுளும்சீண்டல.*

**வளவ. துரையன்**